Deposition of Witness
In the court of the Additional  Subordinate Judge, Tenkasi.
Mcop  263  of 2021
ம..சா.1   மகாலெட்சுமி

| | |
|---|---|
| Name | மகாலெட்சுமி |
| Father's Name | |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

---

16.12.2022 சாட்சி அழைக்கப்பட்டு  சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு  முதல் விசாரணை

நான்   இந்த வழக்கில் மனுதாரர்.   நான்  என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. விபத்து அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2.  பார்வைமகசர் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. மாதிரிவரைபடம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ4. டி.என். 39 சி.ஒய்.2462 வாகனத்தின் ஆர் சி புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ5 மேற்படி வாகனத்தின் பெர்மிட் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ6 மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ7. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ8.  மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் டெய்லரிங் வேலை செய்து வருகிறேன். விபத்து சம்பந்தமான விபரத்தை வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிரூரை விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதை மறுக்கும் விதத்தில் ஆவண சான்று தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.  விபத்தின் போது இருசக்கர வாகனத்தில் என் என் கணவர் என் குழந்தையை முன்னாலும், நான்  பின்புறம் அமர்த்தி ஓட்டி சென்றார் என்றால்

சரிதான். விபத்து நடந்தது திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். என் கணவர் விபத்தின் போது பின்னால் வந்த வாகனத்தை கவனிக்காமல் ரோட்டை கடக்க முயன்ற போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள விபத்து பதிவேட்டின் படி எனக்கு விபத்தினால் ஏற்பட்டது சிறுகாயம் என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டி சென்ற வாகனம் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் வாகனமும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின்படி சேதாரம் இருக்கின்ற காரணத்தினால் என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனத்தை கட்சி சேர்க்காத காரணத்தினால் இம்மனு அவசிய தரப்பினர்களை கட்சிசேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மீது மோதியதாக சொல்லும் வாகனம் பொது பயன்பாட்டிற்கான நடுத்தர சரக்குவாகனம் என்றாலும், அதை 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் 2ம் எதிர்மனுதாரர் அனுமதியுடன் விபத்தின்போது ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்திய காரணத்தினால் 2ம் எதிர்மனுதாரரை ஈட்டுறுதி செய்து 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.